09.10.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.142/2025</u>

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பரமணி | | |
| த/பெ | ராமசாமி | | |
| கிராமம் | வெங்கந்தூர் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 72/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 09.10.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 சித்ரா எனது மருமகள். அ.சா.2 சுரேஷ் எனது மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நாங்கள் ஆசாரங்குப்பம் எல்லையில் சுமார் 19 வருடங்களாக நிலத்தை வாங்கி சரி செய்து, பயிரிட்டுக் கொண்டிருக்கிறோம். நான் ஒரு இடத்தை அக்ரிமெண்ட் போட்டுவிட்டு பயிர் செய்து கொண்டிருந்தேன். அதில் 15 சென்ட் நிலத்தை எதிரிகள் வாங்கி விட்டதாக சொல்லி நான் பயிர் செய்து

கொண்டிருந்த நேரத்தில் பயிரை அழித்துக் கொண்டு வழியில் சென்றார்கள். அது சம்பந்தமாக எங்களுக்கு முன்விரோதம் இருந்தது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மணி காலை சுமார் 7.00 மணியளவில் நான் நிலத்திற்கு வந்தேன். அப்போது எதிரிகள் சேர்ந்து என் பிள்ளையை அடித்துப் போட்டு விட்டு நாலாபுறமும் ஓடிவிட்டார்கள். 1ம் எதிரியின் அப்பா பொன்னுசாமியை கெடார் போலீசார் மோட்டார் சைக்கிளில் உட்கார வைத்துக்கொண்டு, சென்றபோது நான் பார்த்தேன். அவர் கட்டியிருந்த தலைப்பாகை முழுவதும் ரத்தமாக இருந்தது. அந்த ரத்தம் என் மகனை தாக்கியதால் அவர் மீது படிந்த ரத்தம் தான். உடனே நான் என் அண்ணன் மகனை மோட்டார் சைக்கிளில் என்னை முண்டியம்பாக்கம் அழைத்துப் போடா என்று சொல்லி, நான் முண்டியம்பாக்கம் சென்று பார்த்தபோது என் மகனை மருத்துவமனையில் படுக்க வைத்திருந்தார்கள். என் மகனுக்கு எங்கெல்லாம் காயம் இருந்தது என்றால், கை கால் முழுவதும் துண்டு போட்டு சுத்தப்பட்டு இருந்தது. எலும்பு வெளியில் தெரிந்தது. என் மகன் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். எனக்குத் தெரிந்தவைகளை அவரிடம் சொல்லிக் கொண்டேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

பொன்னுசாமி பெயரில் 2006ம் ஆண்டில் அ.வ.எண். 67 / 2006 என்ற வழக்கை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேனா என்றால் ஆமாம். அதில் அந்த இடத்தை சந்திரப் பிள்ளை என்பவரிடமிருந்து வாங்கியதாக சொல்லியுள்ளேனா? என்றால் ஆமாம். பொன்னுசாமி நான் போட்ட வழக்கிற்கு என்ன பதில் வழக்குரை தாக்கல் செய்தார் என்று எனக்குத் தெரியாது. அதில் 07/03/2003 ல் சர்வே எண்களில் சரியான செக்கு பந்திகளுடன் பொன்னுசாமி அந்த நிலத்தை ஒப்புதல்

எடுத்துக்கொண்டு, ஆட்சேபனையின்றி இது நாள் வரை அனுபவித்து வருவதாகவும், 15 சென்ட் நிலம் வழிக்காக விடப்பட்டது என்றும், எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. அந்த இடத்தில் பொன்னுசாமி பிரவேசிக்க கூடாது என்ற எங்களது மனுவை நீதிமன்றம் 25/04/2025ம் தேதியில் தள்ளுபடி செய்து விட்டது என்றால் சரிதான். எனது மகன் காயம் பட்டு எவ்வளவு நாட்கள் கழித்து என்னை காவல்துறையினர் விசாரணை செய்தார்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்த பிறகு தான் நான் இந்த வழக்கின் சாட்சி என்பதே தெரியும். நாங்கள் 19 ஆண்டுகளாக அந்த நிலத்தை அனுபவித்து வருவதாக இந்த அடிதடி வழக்கில் இப்போதுதான் சொல்கிறோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்து எனது மகன்களை அடித்து விட்டார்கள் என்ற விவரத்தையும் தற்போது தான் நான் நீதிமன்றத்தில் சொல்கிறேன். பொன்னுசாமியை போலீசார் கூட்டி சென்றார்கள் என்றும், அவருக்கு அப்போது தலையில் தலைப்பாகை முழுவதும் ரத்தம் இருந்தது என்ற விவரத்தையும், தற்போது தான் முதன்முதலாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால், என் சம்பந்தி புகார் கொடுத்தார். சித்ராவின் அப்பா ராமசாமி என்பவர் புகார் கொடுத்தார். நான் அன்று எனது மகனை மருத்துவமனையில் சென்று பார்த்தேன். காலை சுமார் 7, 8 மணிக்கு போய் பார்த்தேன். நான் தற்போது தான் எனது மகனுக்கு எங்கு எங்கு அடிபட்டது என்ற விவரத்தை சொல்கிறேன் என்றால் சரிதான். எனக்கு இந்த சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், இன்று காலையில் எனது பையன் சொல்லிக் கொடுத்து, நான் எதிரிகள் தான் என் மகனை அடித்து விட்டதாக இவ்வாறாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மகனுக்கு வேறு எங்கோ அடிபட்டுவிட்டது என்பதை வைத்து எனது மகன் பொய் சாட்சியம்

அளிக்கிறார் என்றும், அவர் சொல்லிக் கொடுத்ததன் பேரில் நானும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:-</u>

<u>இல்லை</u>